டிஜிட்டல் டெய்லி

அக்ரி-டாக்டர்

agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 28.10.2025 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 105 - Madurai | Online Edition

# உணவு பதப்படுத்துதலை வலுப்படுத்துவது தேசிய பாதுகாப்பிற்கு ஒரு உத்தி சார்ந்த முன்னுரிமை

புது தில்லி, அக்.27

தேசிய பாதுகாப்பு, ஊரகப்பகுதிகளின் செழுமை, பொருளாதார மீட்சி ஆகியவற்றை உறுதி செய்வதில் முக்கிய பங்களிக்கும் இந்தியாவின் உள்நாட்டு உணவுப்பதப்படுத்துதல் திறனை மேம்படுத்துவதற்கான அரசின் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் கட்டுரையை பிரதமர் நரேந்திர மோடி நேற்று பகிர்ந்துள்ளார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் நிர்மலா சீதாராமன் அலுவலகம் பதிவிட்டுள்ளதற்கு பிரதமர் அலுவலகம் பதிலளித்திருப்பதாவது, உள்நாட்டு உணவுப்பதப்படுத்துதலை வலுப்படுத்துதல் நாட்டின் பாதுகாப்பு முன்னுரிமை என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்பு' என்ற தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்துள்ள முன்முயற்சிகள் எவ்வாறு விவசாயிகளுக்கு அதிகாரம் அளித்து, உள்ளூர் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, ஊரக தற்சார்பை மேம்படுத்துகிறது என்பதை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# வருடாந்திர விதைத் திருவிழா

விருதுநகர், அக்.27

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 28.10.25 செவ்வாய்க்கிழமை அன்று வருடாந்திர விதைத் திருவிழா நடைபெற இருக்கிறது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயனடையுமாறு வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செல்விரமேஷ் கேட்டுக் கொள்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது, வேளாண் உற்பத்தியை பெருக்கி விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் விதைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. வித்தே விளைச்சளின் ஆதாரம். தரமான விதைகளை பயன்படுத்தினால் 15 சதவிகிதம் மகசூல் அதிகரிக்க வழி வகுக்கிறது.

மேலும், தரமான விதை மற்றும் தகுந்த உழவியல் முறைகளை பண்ணை இயந்திரங்கள் மூலம் கையாள்வதால் 40 சதவிகிதம் வரை விளைச்சலை அதிகரிக் கலாம். விவசாயத்தில் கூலி ஆட்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால் வேலைக்கேற்ற ஆட்களை கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. பண்ணை பணிகளை சரியான நேரத்தில் மேற்கொள்வதில் சிரமம் ஏற்படுகிறது.

எனவே விதைப்பது, விதை நேர்த்தி செய்வது, இனத் தூய்மையை கெடுக்கும் கலவன்களை அகற்றுதல், சரியான நேரத்தில் பயிர் ஊக்கிகளை தெளித்தல், பூச்சி மற்றும் நோய் மேலாண்மைக்கு மருந்து தெளித்தல், அறுவடை மற்றும் விதை சுத்திகரிப்பு போன்ற பணிகளை சரியான நேரத்திற்கு மேற் கொள்ள இயந்திரங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே விவசாயிகளுக்கு தரமான விதைகள் மற்றும் விதை உற்பத்திக்கு ஏற்ற இயந்திரங்களை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த இயந்திர மயமாக்கப்பட்ட விதை உற்பத்தி என்ற மையக் கருத்தை வலியுறுத்தி வருடாந்திர விதைத் திருவிழா அருப்புக்கோட்டை வேளான்மை அறிவியல் நிலையத்தில் 28.10.25 செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற இருக்கிறது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

இந்த விதைத் திருவிழாவில் விதை நேர்த்தி, வேளாண்மை மற்றும் காய்கறி பயிர்களில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், விதை உற்பத்தியில் இயந்திரங்களின் பயன்பாடு, விதைத் தர கட்டுப்பாட்டிற்கான விதை சட்டங்கள், விதை சான்றளிப்பு முறைகள் மற்றும் விதை உற்பத்தி வணிகம் போன்ற தொழில்நுட்ப உரைகள் எடுத்துரைக்க இருக்கிறது. மேலும் விதை உற்பத்திக்கு பயன்படும் இயந்திரங்கள், உயர் விளைச்சல் தரும் ரகங்கள், விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள் மற்றும் விதை பரிசோதனை முறைகளை கண்காட்சிகள் மூலம் காட்சிபடுத்தப்பட்ட உள்ளது. இவ்விதைத் திருவிழாவில் விவசாயப் பெருமக்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# பனை நடவு பணியை ஆய்வு செய்த வேளாண்மை இணை இயக்குனர்



சேலம், அக்.27

சேலம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சீனிவாசன், தாரமங்கலம் வட்டாரத்தில் அமர குந்தி தாதப்பிள்ளையூர் மல்லி குட்டை பகுதிகளில் வேளாண் திட்டப் பணிகளை ஆய்வு மேற்கொண்டு தாதப்பிள்ளையூர் ஏரியில் பனை நடவு பணி ஆய்வு மேற்கொண்டு களப்பணியாளர்கள் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க அறிவுரை வழங்கினார்.

பருத்தி, நெல், சோளம், தட்டைப்பயிறு, பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு செய்து கொள்ள அறிவுரை வழங்கினார். பயிர் பாதுகாப்பு பூச்சி நோய்கள் தாக்குதல் குறித்து விவசாயிகளுக்கு உரிய பரிந்துரைகள் வழங்கிட அறிவுரை வழங்கினார். பிறகு துவரை வயல் மற்றும் ஆமனுக்கு வயல் அய்வு செய்தார். ஆய்வில் வேளாண்மை உதவி இயக்குனர் மு கஜேந்திரன் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் சுப்பு கலந்து கொண்டனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது அக்ரி டாக்டர் வாசகர் என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேளாண்மை உதவி இயக்குநர் அறிவுறுத்தல்

திருப்பூர், அக்.27

திருப்பூர் மாவட்டத்தில் குண்டடம் வட்டாரத்தில் தற்போது வடகிழக்கு பருவ மழை பரவலாக பெய்து வருகிறது. எனவே மக்காச்சோளம் மற்றும் சோளம் ஆகிய பயிர்களுக்கு காப்பீடு செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, குண்டடம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், தேசியமய மாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் பொது இ-சேவை மையங்கள் மூலம் பயிர் காப்பீடு செய்து கொள்ளலாம்.

மேலும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் நடப்பு ஆண்டிற்கான அடங்கலை கிராம நிர்வாக அலுவலரிடம் பெற்று அதனுடன் வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் காப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

மக்காச்சோளம் பயிருக்கு 30.11.25 தேதிக்குள், 1 ஏக்கருக்கு ரூ.545/ம், 16.12.2025ந் தேதிக்குள் சோளம் பயிருக்கு ஏக்கருக்கு ரூ.55-ம் செலுத்தி காப்பீடு செய்து கொள்ள காலக் கெடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே குண்டடம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் இயற்கை சீற்றங்களால் பயிர்களுக்கு ஏற்படும் மகசூல் இழப்புகளில் இருந்து பாதுகாக்கும் வகையில், சாகுபடி செய்துள்ள தங்களது பயிர்களை அரசு நிர்ணயித்துள்ள காலக்கெடு தேதிக்கு முன்னர் காப்பீடு செய்து பயன்பெறலாம்.

இதனை, குண்டடம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பழனிகுமார் தெரிவித்துள்ளார்.



# அனைவருக்கும் தேவையே! ஜோதிட ஆலோசனைகள்!!

# அகத்தியர் ஆஸ்ட்ரோ சென்டர்



வாட்ஸப் மூலம் ஜோதிடம் மற்றும் தீர்வுகள்

DOCTOR OF ASTROLOGY

**பா.இளங்கோவன்**

M.Sc., MBA, D.Astro, Phd.,

ஜோதிட எண் கணித, வாஸ்து நிபுணர்



13 ஜி, மருதமலை ரோடு, ஏ.ஒன்.சிப்ஸ் எதிரில் பாப்பநாயக்கன் புதூர், கோவை - 641 041

தொடர்புக்கு 98420 07125

ஜோதிடம், எண் கணிதம், கைரேகை, வாஸ்து திருமணப் பொருத்தம், நிறுவனப் பெயர் வைத்தல், அதிர்ஷ்டக் கல், விவாகரத்துப் பெற்றவர்கள், பெற உள்ளவர்கள் இல்லத்திற்கே வந்து கட்டணத்துடன் ஜோதிட ஆலோசனை தருகிறோம்.







குழந்தையின் கல்வி மற்றும் எதிர்காலம்
இரத்தினக் கற்களுக்கு சிறப்பு ஆலோசனை
அதிர்ஷ்டம் பெற, வெளிநாடு செல்ல மற்றும்
தொழில் வாய்ப்பு ஆலோசனை
திருமணமாகாத பெண்களுக்கு வரன் வரும் திசை
மற்றும் அஷ்டவர்க்க துல்லிய ஆலோசனை

- ஒரு குடும்பத்தில் 5 நபருக்கு மேல் ஜோதிடம் பார்த்தால் ஒருவருக்கு இலவச ஜோதிடம்
- ஜோதிடம் கற்க ஆன்லைனில் ஜோதிட வகுப்பு
- மாதம் ஒரு முறை கோவையில் ஜோதிடரைச் சந்திக்க வாய்ப்பு
- உங்கள் இல்லத்தில் அனைத்து விசேஷங்களுக்கும் சிறப்பு ஆலோசனை



நீங்கள் உலகில் எந்தப் பகுதியில் இருந்தும் மேற்கூறிய தேவைகளுக்கு வாட்ஸ் ஆப் எண் : 98420 07125 மூலம் பயனடையலாம்.

# ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் உள்நாட்டு கூட்டினமீன் வளர்ப்பு வெளிவளாக பயிற்சி



கடலூர், அக்.27

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் 27.10.25 அன்று வெளி வளாக ஒருங்கிணைந்த பண்ணையம் மற்றும் உள்நாட்டு கூட்டினமீன் வளர்ப்பு மற்றும் மதிப்பு கூட்டுதல் பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க. நடராஜன் பயிற்சியினை தொடங்கி வைத்து வரவேற்புரை வழங்கி நபார்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட முழு மாதிரி செயல் விளக்க திடல் மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மீன் வளர்த்தல் செயல் முறைகள் மற்றும் மீன் வளர்ப்பில் அசோலாவின் முக்கியத்துவம் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார். ரம்யா லட்சுமி, மீன்வள உதவி இயக்குநர், மீன் வளர்ப்பில் நீர் தர மேலாண்மை மற்றும் மீன்களில் ஈடுப்பட்டுள்ள அரசு திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துரைத்தார்.

மேலும் பரங்கிபேட்டை வட்டாரத்தின் மீன்வள ஆய்வாளர் முனைவர் கார்த்திக், ஒருங்கிணைந்த பண்ணையில், கிப்ட் திலாப்பியா மீன் குஞ்சு வளர்ப்பு முறை, விரால் மீன்குஞ்சு வளர்ப்பு முறை, கூட்டின மீன் வளர்ப்பு முறை, மீன் வளர்ப்பில் தீவனம், ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் மதிப்பு கூட்டல் பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை வட்டாரத்தை, சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

# விவசாயிகளுக்கு கொய்யா மதிப்புகூட்டல் பயிற்சி

திண்டுக்கல், அக்.27

காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் ஆயக்குடி விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனத்தில் கொய்யா மதிப்புகூட்டல் தொடர்பான பயிற்சி அளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் கொய்யா பழத்தை பயன்படுத்தி பல்வேறு மதிப்பு கூட்டு பொருட்களை உருவாக்கும் முறைகள் விவசாயி



களுக்கு விளக்கப்பட்டது. குறிப்பாக கொய்யா ஊறுகாய், மால்ட் & ஹல்வா போன்ற பொருட்கள் தயாரிக்கப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டன. அதை தயாரிக்கும் முறை மற்றும் அதனை எவ்வாறு சந்தைபடுத்துதல் குறித்து விளக்கம் அளித்தனர். இந்த நிகழ்ச்சியின் மூலம் கொய்யா விவசாயிகள் தங்கள் விளை பொருளை சந்தையில் நேரடியாக விற்பனை செய்வதோடு மட்டு மல்லாமல், மதிப்பு கூட்டு தயாரிப்புகள் மூலம் கூடுதல் வருமானம் ஈட்டும் வழிமுறைகள் குறித்து விழிப்புணர்வு பெற்றனர்.



# நெல் சாகுபடியில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்திட வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை



புதுக்கோட்டை, அக்.27

நெல் சாகுபடியில் புகையான் தாக்குதலைக் கட்டுப்படுத்தி உயர் விளைச்சல் பெற்றிடுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியதாவது, புகையான் என்பது ஒரு தத்துப்பூச்சி. இது சாம்பல் நிறத்தில் இருக்கும் கண்ணாடி போன்ற மெல்லிய சிறிய இறக்கைகளைக் கொண்டிருக்கும். இப்பூச்சி நெற்பயிரின் தூர்களின் அடிப்பாகத்தில் இருந்து கொண்டு பயிரின் சாற்றை உறிஞ்சுகிறது. இதன் தாக்குதலால் பயிர் திட்டுத்திட்டாக வட்ட வடிவில் காயத் தொடங்கி நெற்பயிர் எரிந்து புகைந்து விட்டாற்போல் காணப்படுவதால் இதற்குப் புகையான் என்றழைக்கப்படுகிறது.

மணிகளில் பால் பிடிப்பதற்கு முன்பு பயிர் காய்ந்துவிடும். மணிகள் முற்றாமல் பதராகிவிடும். பயிரின் மேற்பாகத்தில் இதன் தாக்குதலைக் காண்பது அரிது. பயிரின் அடிப்பகுதியிலிருந்து 10 செ.மீ. உயரம் வரை இவற்றைக் காணலாம். வயல்களில் நீர் தேங்கியுள்ள இடங்களில் இதன் தாக்குதல் அதிகமிருக்கும். வானம் மேகமூட்டத்துடன் மப்பும் மந்தாரமுமாக இருக்கும்போது புகையான் பல்கிப் பெருகும். ஐப்பசி மாதத்தில் நிலவும் தட்பவெப்ப நிலை இப்பூச்சியின் எண்ணிக்கை பெருகச் சாதகமாக உள்ளது.

மேலும், நெருக்கி நடப்பட்ட வயல்களிலும், தழைச்சத்து அதிகமிட்ட வயல்களிலும், வரப்போரங்களில் மரநிழல் இருந்தாலும் புகையான் பெருகிட வாய்ப்புள்ளது.

எனவே, விவசாயிகள் வயலையும் வரப்பையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். நெற்பயிரினை நெருக்கமாக நடுவதைத் தவிர்த்து திருந்திய நெல் சாகுபடி முறையில் நட வேண்டும் அல்லது எட்டடிக்கு ஓர் அடி இடைவெளி விட்டுப் பட்டம் விட்டு நடவு செய்தல் வேண்டும். யூரியா மேலுரம் இடும்போது பிரித்து இட வேண்டும்.



வயலில் நீர் மறைய நீர் கட்டுவதனால் புகையானின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம். புகையானின் தாக்குதல் காணப்படும் வயல்களில், ஏக்கருக்கு புப்ரோ பெசின் 25 SC 400 மி.லி. அல்லது தையோமெத்தோசம் 25 WG 100 கிராம் அல்லது இமிடாகுளோபிரிடு 17.8 SL 100 மி.லி. இவற்றுள் ஏதேனும் ஒரு மருந்தினை 200 லிட்டர் நீரில் கலந்து தூர் பகுதியில் படுமாறு தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

# பனை விதைகள் நட்டு நீர் நிலைகளை பாதுகாக்கும் கிராம மக்கள்



திண்டுக்கல், அக்.27

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அருகே கம்பிளியம்பட்டி ஊராட்சியில் உள்ள சீலிமுத்துநாயக்கனூர் கிராமத்தில் ஞாயிற்றுக்கிழமை பனை விதைகளை நடவு செய்த கிராம மக்கள்.

திண்டுக்கல் மாவட்டம், சாணார்பட்டி அடுத்துள்ள கம்பிளியம்பட்டி ஊராட்சியில் உள்ள சீலிமுத்துநாயக்கனூர் கிராம மக்கள், தங்கள் கிராமத்தை பனை மர வனமாக மாற்றும் இலக்குடன், ஒரு லட்சம் பனை விதைகளை நடவு செய்ய முடிவு செய்து உள்ளனர். இதன் முதற்கட்டமாக, ஆயிரம் பனை விதைகளை அம்பளக்காரன் குளக்கரையில் நடவு செய்தனர்.

இந்த கிராமத்தைச் சுற்றியுள்ள நீர் நிலைகளான குளக்கரைகளில் பனை விதைகளை நட்டு, கிராமத்தை பனை வனமாக மாற்றுவதற்கு கிராம மக்கள் திட்டமிட்டுள்ளனர். பெரியவர்கள், இளைஞர்கள், மாணவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து, பனை விதைகளை சேகரித்து, சுற்றியுள்ள கிராமங்களுக்கு முன்மாதிரியாக இந்தப் பணியை மேற்கொண்டனர். அழிந்து வரும் பனை மரங்களை மீட்டெடுப்பதுடன், விவசாய நிலங்களுக்கு நீர் பிடிப்பை பலப்படுத்தவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அவர்கள் தெரிவித்தனர். மேலும், தங்கள் கிராமம் மட்டுமின்றி, முழு ஊராட்சியிலும் பனை விதைகளை நடவு செய்யவும் திட்டமிட்டுள்ளதாக கூறினர்.

# அட்மா திட்டத்தின் மூலம் கீழமாளிகை கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

அரியலூர், அக்.27

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டாரத்தில் உள்ள கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பஞ்சாயத்துக்களில் ஒன்றான கீழமாளிகை வருவாய் கிராமத்தில் வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கும் அட்மா திட்டத்தின் மூலம் மாவட்டத்திற்குள்ளான விவசாயிகள் பயிற்சியானது பழங்கள் மற்றும் காய்கறி வகை பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை எனும் தலைப்பில் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியின் முதலாவதாக அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், விவசாயிகளை வரவேற்று செந்துறை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள இடுபொருட்கள் மற்றும் மானிய விபரம் பற்றியும் எடுத்துக் கூறினார்.

பின்னர் பேசிய சோழன் மாதேவியில் அமைந்துள்ள கீரிடு வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானி அசோக்குமார், கத்தரி, வெண்டை, தக்காளி, முந்திரி போன்ற அப்பகுதியில் சாகுபடி செய்யும் முக்கிய பயிர்களில் காணப்படும் பூச்சித் தாக்குதல் அதன் அறிகுறிகள் மற்றும் அதனை எவ்வாறு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மூலம் கட்டுப்படுத்துவது போன்ற முறை களை பற்றி எடுத்துக்கூறியும் மற்றும் இனகவர்ச்சிப்பொறி, மஞ்சள் ஒட்டும் பொறி போன்ற தொழில்நுட்பங்களை பற்றியும் விரிவாக எடுத்துக்கூறினார்.

பின்னர் பேசிய அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவா, பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தில் உளுந்து, மக்காச்சோளம் போன்ற பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்வதன் அவசியம் பற்றி கூறினார்.

இறுதியாக அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகன் நன்றியுரை கூறினார். இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை பற்றிய தங்களது சந்தேகங்களை கேட்டு அறிந்து கொண்டு பயனடைந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்** நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சுற்றுச்சூழலை பாதுகாப்பது நம்முடைய கடமை - ஏன்? எதற்காக?

நிலம், நீர்,காற்று, ஆகாயம் நெருப்பு என இந்த ஐந்து பஞ்ச பூதங்கள் தான் சுற்றுச்சூழலை காக்க கூடியவை. இவை ஐந்தும் சரியாக இல்லை என்றால் நம்மால் இந்த பூமியில் வாழவே முடியாத நிலை ஏற்படும். இவற்றிற்கு தீங்கு அல்லது மாசு எற்படுத்தும் நிகழ்வு களையே தான் நாம் சுற்றுச்சூழலுக்கு கேடு என்று குறிப்பிடுகிறோம்.

**சுற்றுச்சூழலுக்கு எதனால் பாதிப்பு உண்டாகும்? அவை எவை?**

தொழிற்சாலை கழிவுகள், இரசாயன திரவம் மற்றும் கதிரியக்க கழிவுகள், வாகனங்களின் இரைச்சல் (சத்தம்). அதுமட்டுமல்ல வாகனங்களின் வெளிவரும் புகை, மனிதன் புகைக்கும் பீடி, சிகரெட் புகை, பிளாஸ்டிக் மற்றும் பாலித்தீன் பயன்பாடுகள் காடுகளை அழித்தல். இது ஒருபுறமிருக்க வேளாண் பணிகளில் அதிகபடியான இரசாயன உரங்கள், பூச்சி மருந்துகளின் பயன்பாட்டால் மாசு ஏற்படுகிறது. அதுமட்டுமல்ல தனி ஒரு மனிதன் செய்யும் தவறுகளால் சுற்றுசூழலுக்கு பாதிப்பு ஏற்படுவதாக கூறப்படுகிறது. எனவே சுற்றுச்சுழலின் பாதிப்பு என்பது நம்மிடம் தான் உள்ளது என சுற்றுசூழல் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

**சுற்றுப்புற சூழலை எப்படி மாசுபடுத்துகிறோம்?**

மக்கள் தொகை பெருக்கத்தாலும் வேலை வாய்ப்பை உருவாக்கிட கடந்த 10 ஆண்டுகளில் பெரிய பெரிய நகரங் களை சுற்றி எகப்பட்ட தொழிற்சாலைகள் உருவாக்கிடப்பட்டு உள்ளது. சில ஆலைகள் மக்கள் வசிக்கும் இடங்களுக்கு அருகேயுள்ளது. இது போன்ற தொழிற்சாலைகள் வெளியிடும் புகையால் வளிமண்டலத்தில் இரசாயன விளைவை ஏற்படுத்தி சில சமயங்களில் அமில மழை கூட பெய்கிறது. இதன் விளைவுகளை கூட நாம் அசால்டாக ஆபத்து என தெரிந்தும் கண்டும் காணாத நிலையில் தான் உள்ளோம்.

அந்த நிலையை இனிமேலாவது மாற்றிட முயற்சிப்போம்.

...

**சுற்றுப்புற சூழலை பாதுகாக்க முன்னோர்கள் காட்டிய வழிமுறைகள் தெரியுமா?**

பண்டைய தமிழர்கள் நிலங்களின் தன்மைகேற்ப அதனை ஐந்து வகையாக பிரித்து வைத்தனர். அதாவது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப வாழ்க்கை முறைகளை தான் நம்முடைய முன்னோர்கள் கடைபிடித்து சுற்றுப்புற சூழலியலிற்கேற்றவாறு வாழ்ந்து வந்தனர். ஆனால் இன்றைய நிலைமை அப்படியா இருக்குகிறது? குறிஞ்சி நிலத்தில் மலைப்பகுதியில் எந்தவித வளர்ச்சி திட்டங்களையும் நம்முடைய முன்னோர்கள் செயல்படுத்தியதில்லை. பூமியின் ரத்த நாளங்களாக இருக்கும் நதிகளின் ஊற்றுக்கண் மலையில் தான் உள்ளது. அதை சிதைக்க கூடாது. குறைந்த வரும் காடுகளின் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டும். அதையும் நாம் செய்ய வில்லை. படிப்படியாக காடுகளை அழித்து ரிசார்ட்-யாக மாற்றி வருகிறோம். இது யாருடைய தவறு? விளைநிலங்களை பாது காக்கப்பட்ட மண்டலங்களாக மாற்ற வேண்டும். பல்லுயிர் பெருக் கத்திற்கு இடைஞ்சலாக தான் இன்றைய சமூகம் உள்ளது. பல ஆண்டுகளுக்கு முன் காணப்பட்ட விலங்குகள் கழுதைபுலி, சிட்டுகுருவி, நரி, சிங்கமுக குரங்கு, கழுதை போன்றவை அழிவின் விளம்பில் உள்ளது. எனவே உணவு சங்கிலி (FOOD CHAIN) பாதிக்கப்பட்டு இன்றைய தினத்தில் விவசாய நிலங் களுக்கு காட்டு விலங்குகள் (காட்டுபன்றி, மயில், மான், முயல்) போன்றவை அதிகமாக சேதத்தை உண்டு பண்ணுவதை நாம் கண்கூடாக பார்க்கிறோம். ஒரு பக்கம் காற்று மாசுபாடு, மறுபக்கம் திடக்கழிவுகள் மலை போல குவிந்த நிலை. இதனை படிப்படியாக குறைக்க வேண்டும்.

**சுற்றுப்புற சூழலை பாதுகாக்க தவறினால் உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அதிர்ச்சியான தகவல் என்ன?**

WHO வெளியிட்டுள்ள அறிக்கையில் சுற்றுச்சூழல் மாசுபட்டால் 2030 ஆண்டு முதல் 2050ஆம் ஆண்டிற்குள் இடைப்பட்ட காலத்தில் 2.50 லட்சம் இறப்புகள் (மரணம்) ஏற்படுமென அதிர்ச்சி யான தகவலை வெளியிட்டுள்ளது. தனி மனிதன் முதல் ஆரம் பித்து தெரு, ஊர், நகரம், நாடு, உலகம் என அனைவரின் கூட்டு முயற்சியால் தான் சுற்றுப்புற சூழலை மாசுபடாமல் பாதுகாக்க வேண்டும். இது ஒவ்வொரு தனி மனிதனின் கடமையாகிறது. இயற்கை கொடுத்த பூமியை போற்றி பாதுகாத்து வருங்கால இளைய தலைமுறைகளிடம் ஒப்படைப்போம். **என்ன செய்வீர்களா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# பயிர் காப்பீடு செய்து கொள்ள அழைப்பு

திண்டுக்கல், அக்.27

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்தில் நெல், சோளம், மக்காச்சோளம், நிலக்கடலை, பருத்தி சாகுபடி செய்திட விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ரெட்டியார்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி கூறியதாவது, பாரத பிரதமரின் பயிர் காப்பீடு திட்டம் விவசாயிகளுக்கு எதிர்பாராத விதமாக ஏற்படும் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளுக்கு காப்பீடு வழங்க செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் வட்டாரத்தில் நிகழாண்டில் ராபி பருவம் நெல் 3ஆம் பருவத்துக்கு 2026-ஆம் ஆண்டு ஜனவரி 31 வரையிலும், சோளத்துக்கு டிசம்பர் 16 வரையிலும், மக்காச்சோளம் 3ஆம் பருவத்துக்கு நவம்பர் 30 வரையிலும், நிலக்கடலைக்கு டிசம்பர் 16 வரையிலும் மற்றும் பருத்திக்கு நவம்பர் 30 வரையிலும், உளுந்துக்கு வரையும் நவம்பர் 15ஆம் தேதி வரையும் பயிர் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஏக்கர் சோளத்துக்கான பிரீமியம் ரூ.187, மக்காச் சோளத்துக்கு ரூ.453, நெல் பயிருக்கு ரூ.578, பருத்திக்கு ரூ.950, உளுந்துக்கு ரூ. 255, நிலக்கடலை ரூ.438 வீதம் விவசாயிகள் செலுத்த வேண்டும். ஒரு ஏக்கர் நெல்லுக்கு 38,500 சோளத்திற்கு ரூ 12,496, மக்காச் சோளத்துக்கு ரூ 30,200, பருத்திக்கு ரூ.18,996, நிலக்கடலைக்கு ரூ.29,200 வீதம் பயிர் சேதம் ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகள் முன்மொழிவு படிவத்துடன் பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், சிட்டா, வங்கிக்கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றை இணைத்து காப்பீட்டு கட்டணத்துடன் அருகில் உள்ள பொது சேவை மையம் அல்லது தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் செலுத்த வேண்டும். மேலும் விவரங்களுக்கு அருகாமையில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்.

# நடப்பு சம்பா தாளடி பயிருக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தில் விண்ணப்பிக்க நவம்பர் 15ஆம் தேதி கடைசி நாள்

தஞ்சாவூர், அக்.27

நடப்பு சம்பா மற்றும் தாளடி பயிருக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தில் விண்ணப்பிக்க அடுத்த மாதம் நவம்பர் 15ஆம் தேதி கடைசி நாள் ஆகும் என பட்டுக்கோட்டை வேளாண்மை உதவி இயக்குனர் அப்சரா கூறியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் பயிர் இழப்புகளுக்கு புதுப்பிக்கப்பட்ட பயிர் காப்பீட்டு திட்டம் 2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டை வட்டாரத்தில் சுமார் 6200 ஹெக்டேர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இந்த பருவங்களில் பயிர் காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்திட மோ பொது காப்பீடு நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

நடப்பு 2025 ஆம் ஆண்டில் ராபி சிறப்பு பருவ நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.524 /- விவசாயிகள் பிரீமிய தொகையினை செலுத்தி ஏக்கருக்கு அதிகபட்ச இழப்பீட்டுத் தொகையாக ரூ.37,600 வரை பெறலாம். சம்பா மற்றும் தாளடி நெற்பயிர் காப்பீட்டிற்கு விண்ணப்பிக்க அடுத்த மாதம் 15 ஆம் தேதி கடைசி நாள் ஆகும். இந்த திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள் விருப்பத்தின் பெயரில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்து கொள்ளலாம். கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் அனைவரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாகவோ, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ அல்லது பொது சேவை மையங்கள் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

காப்பீடு செய்யும்போது தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர், கிராமத்தின் பெயர், புல எண், பரப்பு, வங்கி கணக்கு எண் போன்றவற்றை சரியாக உள்ளதா என்பதை சரி பார்த்து காப்பீடு செய்த பின் ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும். ரசீது பெற்ற பின்னர் விவசாயி விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டதில் தவறுகள் கண்டறியப்பட்டால் உடனடியாக விண்ணப்பத்தினை விவசாயிகள் ரத்து செய்து, பின்னர் மீண்டும் புதிதாக சரியான விவரங்களுடன் விண்ணப்பிக்க அறிவிக்கப்பட்ட இறுதி நாளுக்கு முன்னதாக பதிவு செய்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகள் ரத்து செய்யப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரிய தொகை மீண்டும் சம்பந்தப்பட்ட விவசாயின் வங்கி கணக்கிலேயே வரவு வைக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# மண்டபம் வட்டாரத்தில் கிசான் கோஸ்தி விழா



இராமநாதபுரம், அக்.27

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரத்தில் தமிழ்நாடு அரசு வேளாண் துறை சார்பில் வேளாண் தொழில்நுட்ப மேலாண் முகமை திட்டத்தின் கீழ் விவசாயிகள் கலந்தாய்வு நிகழ்ச்சி வேளாண்மை அறிவியல் நிலையம் ராமநாதபுரத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு பாஸ்கர மணியன், வேளாண்மை இணை இயக்குனர், ராமநாதபுரம் தலைமை வகித்தார். செல்வம், வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி விவசாயிகள் மற்றும் அலுவலர்களை வரவேற்றுப் பேசி நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், முனைவர் வள்ளல் கண்ணன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், ராமநாதபுரம் மற்றும் ராஜேந்திரன் வேளாண்மை துணை இயக்குனர் உழவர் பயிற்சி நிலையம், பரமக்குடி, சீதாலட்சுமி, வேளாண்மை அலுவலர் உழவர் பயிற்சி நிலையம், பரமக்குடி, மோனிா, வேளாண்மை அலுவலர், உச்சிப்புளி ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாஸ்கர மணியன், வேளாண்மை இணை இயக்குனர், விவசாயிகளிடையே மழை நீரில் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பாதுகாக்கும் வழிமுறைகள் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கினர். ராஜேந்திரன், துணை வேளாண்மை இயக்குனர் பேசுகையில் விவசாயிகள் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை தொழில்நுட்ப முறைகளை பின்பற்ற வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசினார்.வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் வள்ளல் கண்ணன் விவசாயிகளுக்கு மழை நீரில் பாதிக்கப்பட்ட

நெற்பயிர்களை காக்கும் தொழில்நுட்பம் மற்றும் நெற்பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள், நீர் மேலாண்மை முறைகள் நெல் – உர நிர்வாகம் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கினார். சீதாலட்சுமி, வேளாண்மை அலுவலர் விவசாயிகளுக்கு களை நிர்வாகம் குறித்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கினார்.

மேலும் விவசாயிகளின் பயிர் சாகுபடி தொடர்பான சந்தேகங் களுக்கு முனைவர் வள்ளல் கண்ணன் தொழில்நுட்ப ஆலோ சனைகள் வழங்கினார். அதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு வயல்வெளியில் விசைத்தெளிப்பான் கொண்டு களைக்கொல்லி தெளிப்பு செய்யும் முறைகள் செயல்முறை விளக்கம் செய்து காட்டப்பட்டது.




நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு, திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் மழைநீரில் பாதிக்கப்பட்ட பயிர்களை காக்கும் தொழில்நுட்பம் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. பாரம்பரிய நெல் வகைகள், உயிர் உரங்கள், அங்கக இடு பொருட்கள், நுண்ணூட்ட உரங்கள், மேலும் பல வேளாண்மை இடுபொருட்கள், தொடர்பான கண்காட்சி விவசாயிகள் பார்வைக்கு வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

நிகழ்ச்சி முடிவில் பானுமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர், உச்சிப்புளி நன்றியுரை ஆற்றினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் பவித்ரன் மற்றும் சோனியா ஆகியோர் செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

**Office**
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# தலைவாசல் வட்டாரத்தில் பனை விதைகள் நடவு பணி தீவிரம்



சேலம், அக்.27

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டாரத்தில் வேளாண்மை துறை சார்பில் பசுமை தமிழ்நாடு இயக்கத் திட்டத்தின் கீழ் பனை விதை நடவு பணியை வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, நாவக்குறிச்சி கிராமத்தில் தொடங்கி வைத்து விவசாயிகளிடம் பேசும் போது மண்ணரிப்பை தடுப்பதிலும் நிலத்தடி நீர் ஆதாரத்தை பாதுகாப்பதிலும் சிறந்த இடம் பிடிப்பதுட அடி முதல் நுனி வரை மனிதர்களுக்கு பயன்படக் கூடியதாக உள்ளது. விலங்குகளுக்கும் உணவாக பயன்படு கிறது. காகிதம் கண்டு பிடிப்பதற்கு முன்பு பனை ஓலையே எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்டது. கற்பகதருவான பனை மரங்கள் செங்கல் சூளைகளில் எரிபொருளாக்கப்பட்டு வருவதால் அதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

எனவே மாநில மரமான பனை மரம் வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில் அரசு பல திட்டங்களை வகுத்து வருகிறது என்றும் பனை விதைகளை நடவு செய்து நன்கு பராமரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நாவக்குறிச்சி மற்றும் காட்டுகோட்டை கிராமத்தில் 3000க்கும் மேற்பட்ட பனை விதைகள் நடவு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது துணை வேளாண்மை அலுவலர் மனவழகன் உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சக்தி மற்றும் முன்னோடி விவசாயிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.



# பெத்தநாயக்கன்பாளையம் வட்டாரத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்ட முகாம்



சேலம், அக்.27

சேலம் மாவட்டத்தில் எதிர்பாராத இயற்கை இடர்பாடுகளால் இழப்பு ஏற்படும் பட்சத்தில் விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கவும், நிலையான வருமானம் கிடைக்கச் செய்து அவர்களை விவசாயத்தில் நிலைபெற செய்யவும் பிரதம மந்திரி பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் நேற்று 24.10.25 அன்று பெத்த நாயக்கன்பாளையம் வட்டாரத்தில் உள்ள புத்திரகவுண்டன் பாளையம் கிராமத்தில் திட்ட முகாம் நடைபெற்றது. முகாமிற்கு முருகேசன், அட்மா திட்ட தலைவர் அவர்கள் தலைமை தாங்கினார். வேளாண்மை துணை இயக்குனர் மத்திய திட்டம், கண்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குனர், வேல்முருகன் முன்னிலை வகித்தார். முகாமில் ராபி பருவத்திற்கான பயிர் காப்பீடு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. ராபி பருவத்தில் விதைப்பு முதல் அறுவடை வரை உள்ள பயிர் காலத்தில் வறட்சி, வெள்ளம், புயல், சூறாவளி காற்று,அதிக பரப்பளவில் பூச்சி நோய் தாக்குதல், நிலச்சரிவு, மற்றும் இயற்கை சீற்றத்தினால் தீப்பிடித்தல் ஆகிய இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பிற்கு ஏற்றவாறு, பயிர் அறுவடை பரிசோதனை அடிப்படையில் பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. முகாமில் 60க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். இம்முகாமில் வேளாண்மை அலுவலர் மௌலிதரன், துணை வேளாண்மை அலுவலர் ஞான ஜோதி முருகன், உதவி வேளாண்மை அலுவலர் ராதா மற்றும் ஷிமா நிறுவன அலுவலர் ராஜாதி ராஜா, உமாநாத் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஸ்ரீனிவாசன், அழகரசன், ராஜா கலந்து கொண்டனர். மேலும் இத்திட்டங்கள் குறித்து தெரிந்து கொள்ள வட்டார வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

# வெள்ள பாதிப்பின்போது கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்கள்

கிருஷ்ணகிரி, அக்.27

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரத்தில் பெரும்பாலான விவசாயிகள் நெ துவரை, இராகி போன்ற வேளாண் பயிர்களை சாகுபடி செய்து வருகின்றனர். மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை தொடங்கி, தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களை வெள்ள பாதிப்பிலிருந்து பாதுகாக்க கீழ்கண்ட வெள்ள பாதிப்பு மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைபிடிக்குமாறு சூளகிரி வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

நெற்பயிரில் வெள்ள பாதிப்பு மேலாண்மை தொழில் நுட்பங்கள் வெள்ள நீரினால் நடவு செய்யப்பட்ட பயிர் பாதிக்கப்படுவது பெரும்பாலும் வடகிழக்கு பருவமழை காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஏற்படுகின்றது. புயலினாலும்,தொடர்ந்து அதிக மழையினாலும் போதிய தரைமட்ட வடிகால் இல்லா சூழ்நிலையில் வயலில் மழை அல்லது வெள்ளநீர் அளவுக்கு அதிகமாக பல நாட்கள் தேங்கி நின்று பயிரை பாதிக்கின்றன.

**பயிர் நீரில் மூழ்குவதால் ஏற்படும் பின் விளைவுகள்**

● போரான், இரும்பு, மாங்கனீசு, மணிச்சத்து, தழைச்சத்து, சாம்பல்சத்து, ஆகியவைகளின் கரைதிறன் அதிகமாகி விரயமாகும்.

● மண் அதிகம் குளிர்ந்து விடுவதால், இயற்கையான வெப்பத்தை, மண் அடைய காலஅவகாசம்அதிகமாகும். இதனால் குளிர்ந்த நிலையில் மணிச்சத்து, சாம்பல்சத்து, துத்தநாகச்சத்து மற்றும் தாமிரச்சத்துகளை பயிர்கள் எடுத்துக் கொள்ளும் அளவு குறையும். எனவே பயிரில் மேற்கண்ட சத்துக்கள் பற்றாக்குறை ஏற்படும்.

● தண்ணீர் தேங்கிய நிலையில் பிராணவாயு கிடைக்காமல் வேர்களின் சுவாச இயக்கம் பாதிக்கப்படும்.

● பிராணவாயு கிடைக்காததால் இதனைச் சார்ந்த நுண்ணுயிரிகளின் செயல் நின்றுவிடும் அல்லது குறைந்துவிடும்.

### மழை நீர் வடிதல்

மழைநீர் வடியும்போது நீருடன் மண்ணிலுள்ள தழைச்சத்து சுண்ணாம்பு, மக்னீசியம்,போரான், கந்தகம் மற்றும் சாம்பல் சத்து கரைந்து வெளியாகிவிடும். இதனால் சத்துகள் பற்றாக் குறை ஏற்படும். மழைநீர் வடிந்ததும் தழைச்சத்து உரத்தை அம்மோனிய வடிவில் இடவும். யூரியா இடுவதாக இருந்தால் யூரியாவுடன் ஜிப்சம், மணல் 1:3:5 என்ற விகிதத்தில் கலந்து ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் இடவும்.

- டை அம்மோனியம் பாஸ்பேட்டாக 2% இலைவழியாகத் தெளிக்கலாம்.



● சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துகளையும் இலைவழியாகத் தெளிப்பாக அளிக்கவும்.

**மக்காசோளத்தில் வெள்ள பாதிப்பின்போது கடைபிடிக்க வேண்டிய மேலாண்மை முறைகள்**

**வளர்ச்சிபருவம்**

● கூடுதல் நீரை வடிநீர் வாய்க்கால்கள் அமைத்து விரைவில் வடிகட்ட வேண்டும்.

● களைகளை கட்டுப்படுத்த களைக்கொல்லி தெளிக்க வேண்டும் அல்லது களையெடுப்பு செய்ய வேண்டும்.

● இடைஉழவு செய்து மண்அணைக்க வேண்டும்.

● நீர் வடிந்த பின்பு ஏக்கருக்கு 40கிலோ யூரியா மற்றும்16 கிலோ பொட்டாஷ் கலந்து மேலுரமாக இடவேண்டும்.

● பூச்சி நோய் பாதிப்பினை தடுக்க ஒருங்கிமணந்த பயிர்ப்பாதுகாப்பு முறைகளை கையாளவேண்டும்.

**பூ மற்றும் காய்க்கும் பருவம்**

● கூடுதல் நீரை விரைவில் வடிகட்ட வேண்டும்.

● பூச்சி நோய் பாதிப்பினை தடுக்க ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை கையாளவேண்டும்.

**அறுவடை பருவம்**

● கூடுதல் நீரை வடிகட்ட வேண்டும்.

# அங்கக வேளாண்மை குறித்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கண்டுனர்வு பயணம்

மதுரை, அக்.27


மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 2025-2026ம் ஆண்டு அங்கக வேளாண்மை குறித்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான விழிப் புணர்வு கண்டுனர்வு பயணம் மதுரை மாவட்டத்தில் வேளாண் அறிவியல் மையத்திற்கு செல்லப்பட்டது.




அலங்காநல்லூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெ.தெய்வேந்திரன் கொடியசைத்து பயணத்தை தொடங்கி வைத்தார். இப்பயணத்தில் வெள்ளையம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மற்றும் வாடிப்பட்டி தாய் கலை மற்றும் அறிவியல் மாணவர்கள் சுமார் 100 நபர்கள்; கலந்து கொண்டனர். இப்பயணத்தில் அங்கக முறையில் பயிரிடப்பட்டுள்ள தோட்டக்கலை மற்றும் வேளாண் பயிர்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்பாடுகளை மதுரை வேளாண் அறிவியல் மையம் பேராசிரியர் வேளாண் விஞ்ஞானி நிர்மலா எடுத்துரைத்தார். பின்பு அங்கக முறையில் பயிரிடப்பட்டுள்ள மற்றும் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களை மாணவர்கள் பார்வையிட்டனர்.

மேலும் மதுரை வேளாண் அறிவியல் மையம் தொழில்நுட்ப ஆலோசகர் மாரிமுத்து, தேனீ வளர்ப்பு முறைகள் அதன் பயன்பாடுகள், அசோலா உற்பத்தி முகைகள், மண்புழு உரம் உற்பத்தி, தென்னை நார்க்கழிவு உரம் பயன்பாடு முறைகள், பஞ்சகாவ்யம், பசுந்தாள் உரப்பயிர்கள், இயற்கை பூச்சி விரட்டிகளான இஞ்சி பூண்டு கரைசல், மஞ்சள் வண்ண அட்டை, விளக்கு பொறி, இனகவர்ச்சி பொறி ஆகியவற்றினை பயன்படுத்தி இயற்கை முறையில் சாகுபடி செய்து குறைந்த செலவில் அதிக மகசூல் பெற்றிடலாம் என நிறைய தொழில் நுட்பக் கருத்துக்களை மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்.

மேலும் அங்கக முறையில் சாகுபடி செய்யப்படும் பாரம்பரிய நெல் சாகுபடி செயல்விளக்கத்திடலினை மாணவர்கள் பார்வையிட்டு விற்பனை மற்றும் அதன் மருத்துவ குணங்களின் பயன்பாடு குறித்தும் பல்வேறு வகையான விளக்கங்களை கேட்டு அறிந்து கொண்டனர். அங்கக வேளாண்மை குறித்த பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக் கான மாவட்ட அளவிலான விழிப்புணர்வு கண்டுனர்வு பயணத்திற்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட அலுவலர்கள் வேல்முருகன் செளந்தராஜன், வசந்தி செய்திருந்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333